இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 77 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 10 – செவ்வாய்க்கிழமை 27 அக்டோபர் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 77 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 10 - Tuesday 27 October 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00



முன்னாள் அமைச்சரும், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் – ஆதிலட்சுமி ஆகியோரின் மகள் வழிப் பேரனும், டாக்டர் பா.அருண்குமார் – உமா மகேஸ்வரி ஆகியோரின் மகனுமான ஏ.வைஷ்ணவ் – திருநெல்வேலி சரவணன் – திருமதி விஜய சங்கரி ஆகியோரின் மகள் எஸ்.விகாஷ்ணி ஆகியோரின் மணவிழாவை நேற்று முன்தினம் காலை, சென்னை, திருவான்மியூர் ஸ்ரீராமச்சந்திரா கன்வென்ஷன் ஹாலில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி சிறப்புரையாற்றினார். இம்மணவிழாவில் திருமதி துர்கா ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் – முன்னாள் அமைச்சர் க.பொன்முடி, கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர்– முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, திண்டுக்கல் ஐ.லியோனி உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

த.வெ.க. ஆட்சியில் நாள்தோறும் பாலியல் வன்கொடுமை – குழந்தைகள் – போதைப் பொருள் கடத்தல் அதிகரிப்பு!

‘தீயசக்தி’ யார் என்பதை மக்கள் புரிந்து கொண்டார்கள்!

முன்னாள் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் இல்ல மண விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, அக்.27-

“த.வெ.க. ஆட்சியில் நாள்தோறும் பாலியல் வன்கொடுமைகள், குழந்தைகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே ‘தீயசக்தி’ யார் என்பதை மக்கள் புரிந்துகொண்டார்கள்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் அமைச்சரும், விருது நகர் தெற்கு மாவட்டச் செயலாளருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற, முன்னாள் அமைச்சர்கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களது இல்லத் திருமண விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று ஆற்றிய உரை வருமாறு : –

நம்முடைய அன்புக்குரிய கே.கே.எஸ். எஸ்.ஆர். – ஆதிலட்சுமி ஆகியோரின் மகள் வழிப் பேரனும், என்னுடைய அன்புக்குரிய டாக்டர் பா. அருண்குமார் – உமா மகேஸ்வரி ஆகியோரின் அருமை மகனுமான ஏ.வைஷ்ணவ் அவர்களுக்கும், திருநெல்வேலி சரவணன் – திருமதி விஜய சங்கரி ஆகியோரின் அன்பு மகள் எஸ்.விகாஷ்ணி அவர்களுக்கும், நம்முடைய அன்பான வாழ்த்துக்களோடு இந்த மண விழா நிகழ்ச்சி நிறைவேறியிருக்கிறது.

இந்த மணவிழா நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பை ஏற்று, மணவிழாவை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. அந்த வாய்ப்பினை வழங்கிய மணமக்களுக்கும் மணமக்களின் குடும்பத்தாருக்கும், இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



இங்கு அனைவரும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இது நம்முடைய கழகக் குடும்பத்தில் நடைபெறும் திருமணம். இன்னும் நான் பெருமையோடு உரிமையோடு சொல்ல வேண்டும் என்று சொன்னால், என்னுடைய இல்லத்தில் நடைபெறும் திருமணமாகக் கருதி, இது நம்முடைய குடும்பத்தில் நடைபெறும் திருமணமாக கருதி, இந்த மணவிழா நிகழ்ச்சியில் நாமெல்லாம் கலந்து கொண்டிருக்கிறோம்.

நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களைப் பற்றி அனைவரும் பேசும் போது குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்ட நேரத்தில் இருந்து, இந்த நிமிடம் வரையில், அவர் இந்த இயக்கத்திற்காக என்னென்ன வகையில் பாடு பட்டு இருக்கிறார், பணியாற்றி இருக்கிறார் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

‘அண்ணாச்சி’ என்ற தனி அடையாளம் கொண்டவர்!

அவரை அனைவரும் ‘அண்ணாச்சி’ என்றுதான் அழைப்பார்கள். காரணம், அவர் யாரைப் பார்த்தாலும் ‘அண்ணாச்சி, அண்ணாச்சி’ என்றுதான் சொல்வார். ஏதாவது பணியை, செய்தியை அவரிடத்தில் சொன்னால், ‘சரி அண்ணாச்சி, சரி அண்ணாச்சி’ என்று 10 இடத்திலாவது அந்த ‘அண்ணாச்சி’ என்ற வார்த்தையைச் சொல்லி, ஒரு விஷயத்தைச் சொல்லுவார். ஏதோ, முதியவர்கள் இடத்தில் மட்டுமல்ல; அது ஐந்து வயது குழந்தையாக இருந்தாலும், மூன்று வயது குழந்தையாக இருந்தாலும், பிறந்த குழந்தையாக இருந்தாலும், அதையும் பார்த்து அண்ணாச்சி அண்ணாச்சி என்று சொல்லக்கூடியவர் தான் நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள்.

எம்.ஜி.ஆர். - கலைஞர் - என்னுடைய அமைச்சரவைகளில் சிறப்பாகப் பணியாற்றியவர்!



மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவருடைய தலைமையின்கீழ் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்து பணியாற்றி இருக்கிறார். நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராகப் பணியாற்றிச் சிறப்பாகப் பெயர் பெற்றிருக்கிறார். அதே போல், என்னுடைய தலைமையில் ‘திராவிட மாடல்’ ஆட்சி அமைந்த போது, வருவாய்த்துறை அமைச்சராக பொறுப்பேற்று பணியாற்றி, சிறப்புக்குரிய இடத்தை கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பெற்றிருக்கிறார்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்கம்:

உச்சநீதிமன்றத்தில் அக்.27 அன்று மீண்டும் விசாரணை!

புதுடெல்லி, அக். 27 -

தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் ஒன்றிய அரசுக்கு எதிரான வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் அடுத்த வாரம் மீண்டும் விசாரணைக்கு வர உள்ள நிலையில், இன்று (27ஆம் தேதி) முக்கிய உத்தரவுகள் பிறப்பிக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் செயல்பாடுகள் மீதான புகார்கள் அம்பல மானதைத் தொடர்ந்து தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை சஸ்பென்ட் செய்யவேண்டும் என்பது உள்பட பல்வேறு பொதுநல மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் ஆணையர்களின் ஒருமித்த கருத்து இல்லாமல் எடுக்கப்பட்ட முடிவுகள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும், SIR மூலம் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலை ரத்து செய்து உத்தரவிட வேண்டும், நாடாளுமன்றம் மற்றும் ஒன்றிய அரசின் ஒப்புதல் இல்லாமல் திருத்தப்பட்ட பாரம் 6 ஐ ரத்து செய்ய வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் ஆணையரை தேர்வு செய்யும் குழுவில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு ஒன்றிய அமைச்சரை உறுப்பினராக சேர்த்தது மற்றும் குடியரசுத் தலைவருக்கு கூட வழங்கப்படாத வாழ்நாள் சட்டப்பாதுகாப்பு தேர்தல் ஆணையர்களுக்கு வழங்கிய 2023 சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளுடன் 5க்கும் மேற்பட்ட மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.

இதனை கடந்த 5 ஆம் தேதி விசாரித்த உச்ச நீதிமன்றம் ஒன்றிய அரசு, தலைமைத் தேர்தல் ஆணையர், இரண்டு தேர்தல் ஆணையர்கள் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்ட மனுக்களை இன்று (27ஆம் தேதி) மீண்டும் விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் பட்டியலிட்டுள்ளது.

வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி புயலாக உருவானது!

28ஆம் தேதி கரையைக் கடக்கிறது! தமிழ்நாட்டில் பலத்த மழை!

சென்னை, அக். 27 –

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி, தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலுவடைந்த நிலையில், நேற்று முன்தினம் (26.10.2026) புயலாகவும் வலுப்பெற்றது.

மத்திய கிழக்கு மற்றும் அதனையொட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதி களில் உருவாகி இருந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, நேற்று தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடைந்தது. இது மேலும் வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு மண்டலம், தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, புயலாக (அக்.26) உருவாகிறது. உருவாகும் புயலுக்கு ‘அர்னாப்’ என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த புயல் தொடர்ந்து மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெற்று மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஆந்திர கடலோரப் பகுதிக்கு அருகில் 28ந்தேதி காலை கரையை கடக்கக் கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் வங்கக்கடலில் உருவாகும் புயலால் தமிழ்நாட்டிற்கு பெரிய அளவில் பாதிப்பு இருக்காது என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணிக்கு 140 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசும்!

மேலும் நாளை (28ஆம் தேதி) இது ‘அதிதீவிர புயலாக’ ஆந்திராவின் பாபட்லா விசாகப்பட்டினம் இடையே கரையை கடக்கும் என்றும் மணிக்கு 140 கிலோ மீட்டர் வேகம் வரை காற்று வீசக் கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தமிழ்நாட்டில் தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரமாக இருந்து வருகிறது. குறிப்பாக, நீலகிரி, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் மழை கொட்டி வருகிறது. இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது.